தி/கிண்/ அப்துல் மஜீது வித்தியாலயம்

# முதலாம் தவணைப் பரீட்சை - 2020

தரம் 08

பாடம் : இஸ்லாம்

சுட்டெண் :

பகுதி - I,II

நேரம் : 02 மணி

## பகுதி - I

**சரியான விடையின் கீழ் கோடிடுக.**

01. அல்லாஹ்வின் திருநாமங்களில் அல்-கப்பார் என்பதன் பொருள்
    (1) அளவற்ற அருளாளன் (2) மிகவும் மன்னிப்பவன்
    (3) நிகரற்ற அன்புடையவன் (4) மிகவும் இரக்கமுடையவன்

02. தொழுகையில் முதலாவது அத்தஹிய்யாத் ஓதுவது
    (1) சுன்னத் (2) வாஜிபு (3) பர்ளு (4) நிபந்தனை

03. உலுல் அஸ்ம்களில் இடம்பெறாதவர்
    (1) தாவூத் (அலை) (2) ஈஸா (அலை) (3) மூஸா (அலை) (4) நூஹ் (அலை

04. துஆஉல் இஸ்திப்தாஹ் என்பது
    (1) ஸூரா பாத்திஹா (2) வஜ்ஜஹத்து (3) அத்திஹிய்யாத் (4) குனூத்

05. ஸலாத்துல் இஸ்திஹாரா தொழப்படும் சந்தரப்பம்
    (1) பள்ளியில் நுழைந்தவுடன் (2) சூரிய கிரகணம் ஏற்பட்டால்
    (2) நன்மையை நாடும்போது (4) தேவையை நாடும் போது

06. ப.்.ஸ் என்ற சொல்லின் கருத்து
    (1) மீண்டும் எழுப்பப்படுதல் (2) தராசு (3) நீர்த்தடாகம் (4) விசாரணை

07. இஸ்லாமிய மாதங்களில் ரமழான் எத்தனையாவது மாதம்
    (1) 02 (2) 04 (3) 07 (4) 09

08. ஸுரா பத்திஹாவின் மற்றொரு பெயர்
    (1) உம்முல் குர்ஆன் (2) கல்புல்குர்ஆன்
    (3) முஅவ்விததைன் (4) ஸுரா தௌஹீத்

09. ராதிபாவான ஸுன்னத்துத் தொழுகைக்கான உதாரணமாக அமைவது
    (1) ஸலாதுல் ஈதைன் (2) வித்ர் தொழுகை
    (3) தராவீஹ் தொழுகை (4) ஸலாதுல் இஸ்திஹ்காயி

10. இஸ்லாத்தின் அடிப்படை நம்பிக்கைகளுள் முதன்மையானது
    (1) தவ்ஹீத் (2) நுபுவ்வத் (3) ரிஸாலத் (4) மஆத்

11. **அபுல் பஷர்** எனும் சிறப்புப் பெயர் கொண்ட நபி
    (1) மூஸா (அலை) (2) ஈஸா (அலை (3) ஆதம் (அலை) (4) இப்றாஹீம் (அலை)



kalvi.lk

12. ஸகாத் என்ற கருத்தைக் குறித்து நிற்காத சொல்
    (1) தூய்மை (2) அபிவிருத்தி (3) வளர்ச்சி (4) மறுத்தல்

13. ஷிர்க் என்பதன் கருத்து
    (1) இணைவைத்தல் (2) மதம் மாறுதல் (3) மறுத்தல் (4) மீளுதல்

14. நோன்பு கடமையாக்கப்பட்ட ஹிஜ்ரி ஆண்டு
    (1) ஹிஜ்ரி 01 (2) ஹிஜ்ரி 02 (3) ஹிஜ்ரி 03 (4) ஹிஜ்ரி 04

15. இஸ்லாத்தின் கடமைகளில் இறுதியானது
    (1) தொழுகை (2) நோன்பு (3) ஹஜ் (4) ஸகாத்

16. வேதமும், ஸுஹுபுகளும் வழங்கப்பட்ட நபி
    (1) மூஸா (அலை) (2) நூஹ் (அலை) (3) இத்ரீஸ் (அலை) (4) இப்றாஹீம் (அலை)

17. அல்குர்ஆனின் அத்தியாயங்களின் எண்ணிக்கை
    (1) 7 (2) 30 (3) 114 (4) 6666

18. **"இது உலத்தார் அனைவருக்கும் நல்லுபதேசமேயன்றி வேறில்லை"** என்பது
    (1) அல்குர்ஆனின் கூற்று (2) நபி (ஸல்) அவர்களின் கூற்று
    (3) ஸஹாபாக்களின் கூற்று (4) இமாம்களின் கூற்று

19. பர்ளு கிபாயாவுக்கான உதாரணமாக அமைவது
    (1) பெற்றோருக்கு உபகாரம் செய்தல்
    (2) ஐவேளை தொழுதல்
    (3) நோன்பு நோற்பது
    (4) ஜனாஸா தொழுகையில் கலந்து கொள்வது

20. அல்குர்ஆனில் ஸஜ்தாவுடைய ஆயத்துக்கள் எத்தனை இடங்களில் காணப்படுகிறது
    (1) 13 (2) 10 (3) 17 (4) 15

**பொருத்தமான சொற்களைக் கொண்டு இடைவெளி நிரப்புக.**

1. பொறுமையைக் கொண்டும் ...................................... கொண்டும் உதவி தேடுவோம்.
2. சிரம்பணிதல் என்பது ........................................... ஆகும்.
3. அடியான் அல்லாஹ்வுக்கு மிகவும் நெருக்கமாக இருக்க சந்தர்ப்பம் ...............................ஆகும்.
4. அல்குர்ஆனில் ...................................... ஜுஸ்உகள் காணப்படுகின்றன.
5. தாவூத் (அலை) அவர்களுக்கு .............................................. வேதம் வழங்கப்பட்டது.

(5x2=10 புள்ளிகள்)

**சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (✗) எனவும் அடையாளமிடுக.**

1. ஸகாத் ஸதக்கா என்பவற்றுக்கிடையில் எவ்வித வேறுபாடும் இல்லை. ( )
2. ஸஜ்தா ஸுக்ர் மறதிக்காக செய்யப்படும் ஸஜ்தாவாகும். ( )
3. ஸுரா பாத்திஹா ஓதாமல் தொழுகை நிறைவேறாது ( )
4. பர்ளுகளை பர்ளு ஐன், பர்ளு கிபாயா என இரண்டாகப்பிரிக்கலாம் ( )
5. ஈஸா(அலை) அவர்களது சிறப்புப் பெயர் கலீமுள்ளாஹ்வாகும். ( )

(5x2=10புள்ளிகள்)


kalvi.lk

## பகுதி – II

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

01)

i. தௌஹீத் என்றால் என்ன?

ii. பின்வருவனவற்றின் பொருளைத் தருக.

a. அல் வதூத் -

b. அர்ரஊப் -

c. அல் ஹப்பார் -

iii. அல்குர்ஆனின் தனித்துவமான சிறப்புக்கள் 05 ஐக் குறிப்பிடுக.

(2+3+5=10 புள்ளிகள்)

02)

i. துஆ என்பதன் மொழிக் கருத்துக்களில் இரண்டைக் குறிப்பிடுக.

ii. அல்லாஹ்விடம் உதவி தேடும்போது கவனத்திற்கொள்ளப்பட வேண்டிய இரு விடயங்களும் எவை?

iii. அல்லாஹ்விடம் உதவி தேடுவதனால் கிடைக்கும் நன்மைகள் 5ஐக் குறிப்பிடுக.

(2+3+5=10 புள்ளிகள்)

03)

i. தொழுகையின் பர்ளான ஓதல்கள் இரண்டைக் குறிப்பிடுக.

ii. ஜமாஅத்தாக தொழக்கூடிய மூன்று ஸுன்னத்துத் தொழுகைகளைக் குறிப்பிடுக.

iii. தொழுகையின் மறுமைப் பயன்கள் 05 தருக.

(2+3+5=10 புள்ளிகள்)

04)

i. ஸுன்னா முஅக்கதா - ஸுன்னா கைரு முஅக்கதா என்பவற்றை வேறுபடுத்துக.

ii. ஸஜ்தாக்களின் மூன்று வகைகளையும் தருக.

iii. ரமழானில் கடைபிடிக்குமாறு இஸ்லாம் காட்டித் தரும் நல்லமல்கள் 5ஐக் குறிப்பிடுக.

(2+3+5=10 புள்ளிகள்)



kalvi.lk

# GRADE 6-11

## STUDY WITH US..!

# ICT ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.

Conducted by

**Pathmanathan Pathmaraj**

(BIT, B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)



**TAMIL MEDIUM**

**ENGLISH MEDIUM**

**MONTHLY**

**600/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

கல்வி

Digital Learning Platform

www.kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page